**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.523/2017**

| | |
|---|---|
| **NAME** | **:** சந்தீப் |
| **FATHER NAME** | **:** |
| **VILLAGE** | **:** |
| **TALUK** | **:** |
| **CALLING** | **:** |
| **RELIGION** | **:** |
| **AGE** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 02.12.2022.**

குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை செய்தபிறகு இந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தற்போதுதான் இந்த ஆவணம் எனக்கு கிடைக்கப்பெற்றது, அதனால் முதலில் தாக்கல் செய்யவில்லை. எங்கள் வீட்டில் மிஸ்பிலேஸ் ஆகியிருந்தது. இந்த காரணம் என்னுடைய அபிடவிட்டில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணையில் ஏற்கெனவே கேட்ட கேள்விகளின் பதிலில் உள்ள லேக்குனாசை நிரப்ப வேண்டுமென்று தற்போது இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த சிஆர்பி மனு முடிக்கப்பட்டுவிட்டது. இந்த விவரம் மனுவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த சிஆர்பியின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. சிபிஐ ரிப்போர்ட்டின்பெயரில்தான் சார்ஜ் ஷீட் போடப்பட்டு வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது. நான்தான் விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டி வந்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனத்தை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா அந்த காரில் பயணம் செய்தவர் என்றால் சரி. என்னுடைய கவனக்குறைவால்தான் இந்த விபத்தே ஏற்பட்டது என்றால் இல்லை, நான்தான் இந்த வழக்கில் தீங்கிழைத்தவர் என்றால் சரியல்ல. எனவே நான் இந்த வழக்கில் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 வாகனங்கள் இந்த வழக்கில் விபத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தால் இரண்டு வாகனங்களுமே இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. மற்றொரு வாகனத்தின் காப்பீட்டாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவரும் இந்த வழக்கில் தேவையான தரப்பினர் என்றால்

.......2

தெரியாது. நான் வேண்டுமென்றே அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களுமே விபத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தால் இரண்டு வாகனங்களுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் எதிரே வந்த வாகனத்தின் அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என குறிப்பிட்டபடியால் அந்த வாகனத்தின் காப்பீட்டாளரையும் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு விபத்து சமயத்தில் 73 வயது என்பதாலும் அவர் முதுமையின் காரணத்தால்தான் இறந்தார் என்றாலும் அதனால்தான் பிரேத பரிசோதனையே செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. பிரேத பரிசோதனை செய்திருந்தால் இறப்பிற்கான காரணம் தெரியவந்திருக்கும் என்பதால் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் பதிலளிக்க தமிழில் மொழிபெயர்த்து சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.